

சென்னை லயோலா கல்லூரி வளாகத்தில், நேற்று முன்தினம் (21.09.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா 'சட்டமன்ற நாயகர் கலைஞர்' கருத்தரங்கத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவரும், சட்டமன்ற நாயகர் கலைஞர் விழாக் குழு தலைவருமான மு.அப்பாவு, சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது என்ற தலைப்பில் சிறப்பாக உரையாற்றிய மாணவர்களை பாராட்டி சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கி விழா பேருரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவர், கு.பிச்சாண்டி, விழாக் குழு இணைத் தலைவர் அரசு தலைமைக் கொறடா விழாக் குழு இணைத் தலைவர் முனைவர் கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், ஆர்.மூர்த்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலாளரும், விழாக் குழு உறுப்பினர் செயலாளருமான சா.பீட்டர். முனைவர் கி.சீனிவாசன், சட்டமன்ற நாயகர்– கலைஞர் விழாக் குழு உறுப்பினர்கள் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் அல்போன்ஸ், முன்னாள் உறுப்பினர் சி.ஞானசேகரன், முன்னாள் சட்டமன்றப் பேரவைச் செயலாளர் மா.செல்வராஜ், கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் ஆர்.ராவணன், லயோலா கல்லூரியின் முதல்வர் பாக்டர் ஏ. லூயிஸ் ஆரோக்கிய ராஜ், மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலக உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க.

# அனைத்து அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்

## அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றுகிறார்

திருவண்ணாமலை, செப்.23-

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க.வைச் சார்ந்த அனைத்து அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. ஆலோசனைக்கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலைசெயல் திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இது குறித்து மாவட்ட தி.மு.க. அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்...

24.9.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க.வைச் சார்ந்த அனைத்து அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

ஆலோசனைக்கூட்டத்திற்கு வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் தலைமை வகிக்கிறார்.

அனைத்து அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப் படவுள்ளது.

அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுப் பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலைசெயல் திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

ஆலோசனைக்கூட்டத்தில் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க.வைச் சார்ந்த இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, இலக்கிய அணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப்பேரவை, மருத்துவர் அணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு, சுற்றுச்சூழல் அணி, தொண்டர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, வர்த்தகர் அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மகளிர் தொண்டர் அணி, அயலக அணி, தொழிலாளர் அணி, மீனவர் அணி ஆகிய அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் அவசியம் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆலோசனைக்கூட்டத்தில் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஓ.ஜோதி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2024- நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு

# மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை செயல்படுத்த வேண்டும்!

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தல்!



புதுடெல்லி, செப்.23-

"2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை செயல்படுத்த வேண்டும்" என்று நாடாளுமன்ற மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில், மக்களவையில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா மீதான விவாதத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் பேசியதாவது:-

தி.மு.க.வின் ஆற்றல்மிக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் முன்னோடியாக திகழ்கிறார். ஆகையால், இந்த மசோதாவை நான் ஆதரித்து பேசுகிறேன்.

இந்த முன்முயற்சியை நான் பாராட்டினாலும், சில அச்சங்களும், சந்தேகங்களும் இதில் உள்ளன. பெண்கள் இதுவரை அவர்கள் அனுபவத்தில் இல்லாத பாதையில் நுழையவும், அங்கீகாரம் இல்லாத இடத்துக்கு செல்லவும் இது வழிவகுக்கும் என்ற பெரும் எதிர்பார்ப்புடன் மசோதாவை படிக்க திறந்தேன். ஆனால், அது பெரும் ஏமாற்றமாகி விட்டது. இது திவாலான வங்கியில் தேதியிட்ட காசோலை போல உள்ளது. மேலும் இது ஒரு நிச்சயமற்ற நிச்சயதார்த்தத்திற்கு சமமானது. எப்போது திருமணத்தில் முடிவடையும் என்று தெரியவில்லை.

**உரிமையான விஷயம்!**

பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா உரிமையான ஒரு விஷயம். அது தயவுக்குரிய விஷயம் அல்ல. இடஒதுக்கீடு என்பது பிறப்புரிமை. தி.மு.க. இந்த மசோதாவை வரவேற்று ஆதரிக்கும் அதே வேளையில், பெண்கள் அதிகாரம் பெற்றிருந்தது இந்த காலத்தில் என்பதல்ல, 3500 ஆண்டுகளுக்கு முன்பு சங்க காலத்திலேயே அதிகாரம் பெற்றவர்களாக பெண்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

உதாரணத்துக்கு அவ்வையார் என்ற பெண்பாற் புலவர் 'அனைவரும் ஞானமாக வாழ மூதுரை' எனும் கையேட்டை எழுதினார். அதைப்போல செழுமையான தமிழ்க் காப்பியங்களான மணிமேகலையும், சிலப்பதிகாரமும் பெண்களின் உரிமைகள் மற்றும் அதிகாரத்தை தவறாமல் எடுத்துரைத்துள்ளன.

தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலம். இந்த மசோதா திராவிட இயக்கம் மூலம் அங்கே விதைக்கப்பட்டது. திராவிட மாதிரியில் அனைத்து திட்டங்களின் இடஒதுக்கீடும் அங்கே பெண்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது. உதாரணமாக குடும்ப சொத்துக்களில் சம உரிமை, 1989-ஆம் ஆண்டு உள்ளாட்சி பிரதிநிதித்துவத்தில் 50 சதவீதம், தற்போது அரசுப்பணிகளில் பெண்களுக்கு 40 சதவீதம் இடஒதுக்கீடு அளிக்கப்பட்டு உள்ளது. மாநகர அரசு பஸ்களில் பெண்களுக்கு கட்டணமில்லா பயணம் அமல்படுத்தப்பட்டு உள்ளது.

சமீபத்தில் 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் பெண்களுக்கு மாதம் ரூ.1000 கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு இருக்கிறது. இது இந்திய வரலாற்றிலேயே ஏன் உலக வரலாற்றிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில்தான் செய்யப்பட்டு இருக்கிறது.

**ஏன் ஆங்கிலத்தில் இல்லை?**

''அச்சமும், நாணமும் நாய்கட்கு வேண்டுமாம் நமக்கு வேண்டாம்'' என்று பாரதியார் கூறியிருக்கிறார். பெண்களுக்கு அச்சத்தையும், முட்டாள் தனத்தையும் கற்பிக்காதே. பெண்களுக்கு சம உரிமைகள் வேண்டும் என்பதே இதன் அர்த்தம். இந்த உலகில் நேசத்துக்கு உரிய மனிதர்களாக எங்கும் தலை நிமிர்ந்து நடமாடும் உரிமையைத்தான் நாங்கள் விரும்புகிறோம்.

இதை 'நாரி சக்தி வந்தான் ஆதிநியம்' என்று இந்தியில்தான் சொன்னார்கள். ஏன் அது ஆங்கிலத்தில் இல்லை? நாரிசக்தியை பெரிதாக பேசும் நீங்கள் நாடாளுமன்ற திறப்பு விழாவுக்கு ஏன் ஜனாதிபதியை அழைக்கப்படவில்லை. இந்த மசோதாவில் மாற்றுத்திறனாளிய பெண்களுக்கு சிறப்பு ஒதுக்கீடு இல்லை. திருநங்கைகளுக்கு இட ஒதுக்கீடு இல்லை, அதைப்போல மாநிலங்களவை மற்றும் மாநில சட்ட மேலவையிலும் ஒதுக்கீடு இல்லை.

இந்த மசோதாவின் 5வது பிரிவு, எல்லை நிர்ணய நடவடிக்கைக்கு பின்னர் விதிகள் நடைமுறைக்கு வரும் என்று கூறுகிறது, இது கற்பனையான வாக்குறுதி. எல்லை நிர்ணயம் 2026-ல் திட்டமிடப்பட்டுள்ளது. 2021-ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு தற்போதுவரை நடைபெறவில்லை. இதன் மூலம் இந்த மசோதா, அரசாங்கத்தின் தேர்தல் நிகழ்ச்சி நிரல் என்பது தெளிவாகிறது. பெண் வாக்காளர்களை கவர்ந்திழுக்க முயலுக்கு முன்னால் ஒரு கேரட்டை வைக்கிறீர்கள். ஆனால் இந்திய பெண்கள் மிகவும் புத்திசாலிகள். எது சரி? எது தவறு? என்பதை புரிந்துகொண்டு வாக்களிப்பார்கள்.

முடிவாக, அம்பேத்கரை மேற்கோள்காட்டி சட்ட அமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன். அரசியலமைப்பைத் திருத்தும் போதெல்லாம், அதன் பலனை விரைவாக அறுவடை செய்ய வேண்டும் என்ற அண்ணல் அம்பேத்கரின் அறிக்கையை நினைவில் கொண்டு, 2024-ஆம் ஆண்டு தேர்தல் தொடங்குவதற்கு முன், இந்த மசோதாவை விரைவில் செயல்படுத்த வேண்டும். இது நிறைவேற்றப்படும் பட்சத்தில், ஒரு பெண்ணிற்கு இது சிறிய அடி எடுத்து வைத்தல் - ஆனால் பெண்ணிற்கு மிகப் பெரிய பாய்ச்சலாகும்.

இவ்வாறு தமிழச்சி தங்கபாண்டியன் பேசினார்.

# தொழிலாளர் நலத்துறை அலுவலர்களின் பணித் திறனாய்வுக் கூட்டம்!

## அமைச்சர் சி.வி.கணேசன் பங்கேற்பு!

சென்னை, செப் 23-

சென்னை, டி.எம்.எஸ். வளாகம், தொழிலாளர் நல வாரிய கட்டிட கருத்தரங்கு கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, அமைச்சர், சி.வி.கணேசன், தலைமையில் தொழிலாளர் துறை அலுவலர்களின் பணித்திறனாய்வு கூட்டம் நேற்று முன்தினம் (21.9.2023) நடைபெற்றது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், இக்கூட்டத்தில் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இந்த ஆய்வு கூட்டத்தில் தமிழ்நாடு முழுவதிலிருந்து அலுவலர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இந்தியாவில் அதிகமான தொழிலாளர்களை கொண்டுள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்பாக இருக்கும் தொழிலாளர்களின் நலனை பாதுகாக்கும்பொருட்டு அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் குழந்தை தொழிலாளர்களே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார். அதனை அலுவலர்கள் நிறைவேற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

நிர்வாகத்தினருக்கும், தொழிற்சங்கத்தினருக்கும் தொழிலாளர் துறை அலுவலர்கள் பாலமாக இருந்து பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தி உள்ளார்.

மேலும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், தொழிலாளர் துறை அலுவலர்களின் பணிகளை திறனாய்வு மேற்கொண்டு, அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியத்தில் நிலுவையில் உள்ள பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருமண உதவித் தொகை, விபத்து, மரண உதவித் தொகை, ஓய்வூதியம் போன்ற கேட்பு மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் விரைந்து முடித்து தீர்வு கண்டு பதில் அளிக்க வேண்டும் எனவும் அனைத்து தொழிலாளர்களுக்கும் அரசின் நலத்திட்ட உதவிகள் உரிய நேரத்தில் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

தொழிலாளர் துறையில் பல்வேறு சட்டங்களின் கீழ் நடைபெற்று வரும் நீதிசார் வழக்குகளை தொழிலாளர்களின் நலன் காக்கும் வகையில் விரைந்து முடிக்கவும், எனவும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் உள்ள அமலாக்க நடவடிக்கைகளை திறம்பட மேற்கொள்ளவும் தொழிலாளர் துறை அலுவலர்களை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தோட்டத் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்கும் வகையில், அவர்களுக்கு உரிய மருத்துவ வசதிகளை ஏற்படுத்தி தருமாறும், அதனை உறுதி செய்ய வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

தொழில்தகராறுகள் சட்டம் 1947, தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 1947, குறைந்தபட்ச ஊதியங்கள் சட்டம் 1948, பணிக்கொடை வழங்கல் சட்டம் 1972, சட்டமுறை எடையளவு சட்டம் 2009 மற்றும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் தொடர்பாக வழக்குகள் நிலுவையில் உள்ளதை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், முதன்மை செயலாளர் / தொழிலாளர் ஆணையர், முனைவர். அதுல் ஆனந்த், கூடுதல் தொழிலாளர் ஆணையர் (நிர்வாகம்), கூடுதல் தொழிலாளர் ஆணையர் (சமரசம்) கூடுதல் தொழிலாளர் ஆணையர் (ஆய்வுகள்), மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், செயலாளர், தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியம், செயலாளர், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம், செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் மற்றும் சமூக பாதுகாப்பு நலவாரியம், அனைத்து தொழிலாளர் இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் தலைமையிட அலுவலர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்ச் சமூகத்தினரின் பங்கு மகத்தானது!

# இந்தியாவின் விண்வெளித் திறன் உலகின் பாராட்டைப் பெற்றுள்ளது!

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் பேச்சு!



புதுடெல்லி, செப். 23 -

இந்தியாவின் விண்வெளித்திறன் உலக நாடுகளின் பாராட்டைப் பெற்றுள்ளது என்பதோடு, இதில் தமிழ்ச் சமூகத்தினரின் பங்கும் மகத்தானது என்று மக்களவையில் கழக உறுப்பினர் வேலூர் டி.எம்.கதிர்ஆனந்த் பேசுகையில் குறிப்பிட்டார்.

சந்திரயான்3 திட்டத்தின் மகத்தான வெற்றி குறித்து நாடாளுமன்ற மக்களவையில் 21/09/23 நடைபெற்ற விவாதத்தில் வேலூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் தி.மு.க. சார்பில் கலந்து கொண்டு ஆற்றிய உரை கீழ் வருமாறு:

இன்று இந்த ஜனநாயகக் கோவிலில் இந்தியாவுக்கு மட்டுமல்ல; அனைத்து மனித இனத்திற்கும் வெற்றியைக் கொண்டாடுவதற்காக நாங்கள் இங்கு கூடியுள்ளது பெரு மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆம், சந்திரயான்3 பணியின் வெற்றி இந்திய திருநாட்டின் ஒரு மகத்தான மைல்கல், மேலும் தமிழர்கள் என்ற பெருமையுடன்; விண்வெளி ஆய்வுத் துறையில் நமது இந்திய நாட்டின் சாதனைகளில் இரட்டிப்பு மகிழ்ச்சியும் பெருமையும் உள்ளது.

பல்வேறு துறைகளில் முன்னோடியாகத் திகழ்ந்த தமிழ் மக்கள் வளமான வரலாற்றைக் கொண்டுள்ளனர்.இன்று விண்வெளியில் இந்தியா மேற்கொண்டுள்ள முன்னேற்றங்களில் அதே உணர்வு பிரதிபலிப்பதைக் காண்கிறோம்.

எங்கள் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த பலர் இந்த மகத்தான முயற்சியின் ஒரு பகுதியாக இருந்து அவர்களின் நிபுணத்துவம் அறிவு மற்றும் ஆர்வத்துடன் பங்களித்துள்ளனர்.

நமது பண்டைய தமிழ் இலக்கியம் கவிதை அழகு நடையில் பஞ்சபூதங்கள் அதாவது நீர், நெருப்பு, நிலம், காற்று, ஆகாயம் ஆகியவற்றைப் பற்றி பேசுகிறது. இந்த ஐந்தையும் வென்று எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த செயல்களைச் செய்யும் திறன் மனிதனுக்கு மட்டுமே உள்ளது.

இன்று நம் முன்னோர்கள் கதை வசனங்களில் எழுதிய கனவுகள் இப்போது நட்சத்திரங்களை அடையும் போது நனவாகி வருவதைப் பார்க்கும்போது நம் இதயங்களை மகிழ்ச்சியில் நிரப்புகிறது.

சந்திரயான் 3 இன் பயணம் சந்திரனை அடைவது மட்டுமல்ல; கனவு காணத் துணிந்த எண்ணற்ற மனங்களின் பயணத்தையும் பற்றியது. இது இந்தியாவின் கூட்டு மனப்பான்மை மற்றும் தமிழ்ச் சமூகம் இந்த துடிப்பான திரைக்கு சேர்க்கும் சிறப்புத் தொடர்பைப் பற்றியது.

கருத்தியல்ரீதியாக நாடுகள், மக்கள் பிளவுபட்டிருப்பதை அடிக்கடி பார்க்கும் உலகில், இந்தியாவின் விண்வெளித் திறனைப் பாராட்டுவதற்கு உலகெங்கிலும் உள்ள மக்கள் ஒன்றிணைவதைக் காண்பது மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது.

சந்திரயான் 3 பணி நமது ஒரே இயற்கை செயற்கைக்கோளான சந்திரனைப் பற்றிய நமது புரிதலை விரிவுபடுத்தியது மட்டுமல்லாமல் விண்வெளி ஆய்வுக் கலையில் நாம் எவ்வளவு தூரம் வந்துள்ளோம் என்பதையும் இது காட்டுகிறது.

'சந்திரயான்' என்ற பெயர் 'மூன்கிராஃப்ட்' என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. பெயர் குறிப்பிடுவது போலவே, இந்த சந்திர ஆய்வானது இந்தியாவின் கையொப்பத்தை சந்திரனின் மேற்பரப்பில் செதுக்கும் கருவியாக உள்ளது. மாணவச் செல்வங்கள் உட்பட நமதுஎதிர்கால சந்ததியினரை இன்னும் பெரிய கனவு காண தூண்டுகிறது.

அத்தகைய வெற்றியின் விளைவுகள் பன்மடங்கு. சந்திரனைப் படிப்பதன் மூலம் நாம் பெறும் விஞ்ஞான அறிவிற்கு அப்பால் தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்கள் சுகாதாரம் மற்றும் தகவல் தொடர்பு முதல் போக்குவரத்து மற்றும் அதற்கு அப்பால் பல்வேறு துறைகளுக்கு பயனளிக்கும். மேலும் இது உலகளாவிய விண்வெளி சமூகத்தில் இந்தியாவின் முன்னணி நிலையை பலப்படுத்துகிறது. மேலும் வரும் ஆண்டுகளில் இன்னும் அதிக லட்சிய முயற்சிகளுக்கு வழி வகுக்கும்.

சந்திரயான்3 திட்டத்தை அற்புதமாக வெற்றியடையச் செய்வதற்கு பங்களித்த ஒவ்வொரு நபரையும் சீரும் சிறப்புடன் பாராட்டுவோம். அவர்களின் அயராத முயற்சியாலும் தூக்கமில்லாத இரவுகளாலும் இணையற்ற பேரார்வத்தாலும், புது நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் நட்சத்திரங்களை நோக்கிப் பார்க்கிறோம்.

சந்திரயான் 3 திட்டம் இந்தியாவின் வெற்றிக் கதை மட்டுமல்ல>முழு உலகிற்கும் உத்வேகத்தின் கலங்கரை விளக்கமாகும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் பொறுப்பாளர்கள் நியமனம்!

## மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிக்கை!

சென்னை, செப். 23-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் "முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா - கழக பவள விழா கொண்டாட்டம்" குறித்து மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சிறுபான்மையின மக்களின் பாதுகாவலர்; தரணி போற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலோடு தலைமைக் கழக அறிவிப்பின்படி, தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக பவள விழாவினை "கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு" சார்பாக தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து மாவட்டக் கழகங்களிலும் ஆண்டு முழுவதும் கொண்டாடிடும் வகையில் 72 மாவட்டக் கழகங்கள் 10 மண்டலங்களாக தொகுக்கப் பட்டு, மாநில துணைச் செயலாளர்கள் மண்டல பொறுப்பாளர்களாக கீழ்க்கண்டவாறு நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

அனைத்து மண்டல பொறுப்பாளர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மண்டலங்களின் மாவட்டக் கழகச் செயலாளர்களுடன் கலந்தாலோசித்து அவர்களின் ஒத்துழைப்புடன் மண்டலங்களுக்கு உட்பட்ட மாவட்டக் கழகங்களில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளையும், கழக பவள விழா நிகழ்ச்சிகளையும் சிறப்புடன் நடத்திட வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிகழ்ச்சி: முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் "சமூக நீதி, மதச் சார்பின்மை கோட்பாடுகள் என்ற தலைப்பில்" உள்ளூர் இஸ்லாமிய, கிறிஸ்துவ மற்றும் சிறுபான்மையின அமைப்பின் மத தலைவர்களைக் கொண்டு பொதுக்கூட்டம் நடத்துதல்; ஆவணப் படங்கள் திரையிடல், மற்றும் கலைஞரின் சமய சார்பற்ற சமூக நீதி செயல்பாடுகள் குறித்து அறிவுப்பசியாற்ற கருத்தரங்கம், வயிற்றுப் பசியாற சமபந்தி ஆகியவை ஏற்பாடு செய்தல்.

**மண்டலம் 1: டாக்டர் அ.சுபேர்கான்** (செயலாளர்) சென்னை வடக்கு மாவட்டம், சென்னை வடகிழக்கு மாவட்டம், சென்னை கிழக்கு மாவட்டம், சென்னை மேற்கு மாவட்டம், சென்னை தென்மேற்கு மாவட்டம், சென்னை தெற்கு மாவட்டம்

**மண்டலம் 2: என்.பி.எம். சேக் அப்துல்லா** (துணைச் செயலாளர்) திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், திருவள்ளூர் மேற்கு மாவட்டம், திருவள்ளூர் மத்திய மாவட்டம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

**மண்டலம் 3 : எம். நூருல்லா,** (துணைச் செயலாளர்) வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை மாவட்டம், திருப்பத்தூர் மாவட்டம், திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.

**மண்டலம் 4: அடையாறு ஷபீல்** (துணைச் செயலாளர்) விழுப்புரம் வடக்கு மாவட்டம், விழுப்புரம் தெற்கு மாவட்டம், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், கடலூர் கிழக்கு மாவட்டம், கடலூர் மேற்கு மாவட்டம்.

**மண்டலம் 5: வீ.விஜய குமார்** (துணைச் செயலாளர்) தருமபுரி கிழக்கு மாவட்டம், தருமபுரி மேற்கு மாவட்டம், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய மாவட்டம், நாமக்கல் கிழக்கு மாவட்டம், நாமக்கல் மேற்கு மாவட்டம்

**மண்டலம் 6: இரா.அன்வர்கான்** (துணைச் செயலாளர்) கோவை வடக்கு மாவட்டம், கோவை தெற்கு மாவட்டம், கோவை மாநகர் மாவட்டம், ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, நீலகிரி மாவட்டம்

**மண்டலம் 7: முனவர் ஜான்** (துணைச் செயலாளர்) திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், திண்டுக்கல் மேற்கு மாவட்டம், பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் மாவட்டம், கரூர் மாவட்டம்

**மண்டலம் 8: மு.சாகுல் அமீது** (துணைச் செயலாளர்) தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை தெற்கு, மயிலாடுதுறை, நாகை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், திருச்சி வடக்கு மாவட்டம், திருச்சி தெற்கு மாவட்டம், திருச்சி மத்திய மாவட்டம், புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

**மண்டலம் 9: ரபி அஹமது** (துணைச் செயலாளர்) மதுரை வடக்கு மாவட்டம், மதுரை தெற்கு மாவட்டம், மதுரை மாநகர் மாவட்டம், தேனி வடக்கு மாவட்டம், தேனி தெற்கு மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை மாவட்டம், விருதுநகர் வடக்கு மாவட்டம், விருதுநகர் தெற்கு மாவட்டம்

**மண்டலம் 10: வி. ஜோசப் ராஜ்** (துணைச் செயலாளர்) திருநெல்வேலி கிழக்கு மாவட்டம், திருநெல்வேலி மத்திய மாவட்டம், தென்காசி வடக்கு மாவட்டம், தென்காசி தெற்கு மாவட்டம், தூத்துக்குடி வடக்கு மாவட்டம், தூத்துக்குடி தெற்கு மாவட்டம், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.